சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 24.03.2026

வா.சா.1 –குடலன் S/o கருத்தபயல்

O.S. No.273/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

நான் கிராம நிர்வாக அலுவலருக்கு உதவியாளராக வேலை பார்த்து பொய்கைகரைப்பட்டியில் ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் 2013ம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான மேற்படி விபரத்தை வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கு அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்பதை வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கு அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அகத்திகீரை கான்ட்ராக்ட் தொழில் ஓய்வுக்குபின்னர் செய்து வந்தேன். மேற்படி கான்ட்ராக்ட் தொழில் செய்து வருவதாக என்னுடைய வழக்கில் நான் சொல்லவில்லை என்றால் என் மகன் செய்து வருகிறார். நான் அவரோடு சேர்ந்து வேலை செய்து வருகிறேன். எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் பென்ஷன் வருகிறது. எனக்கு மாதம் பிடித்தம் போக 9500ரூபாய் கிடைக்கும். மாதம் 9500ரூபாய் ஓய்வூதியம் கிடைக்கிறது என்பதை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கு அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி சின்னையாவும் கிராம நிர்வாக அதிகாரிக்கு உதவியாளராக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். சின்னையா 3 மாதத்திற்கு முன்னர் தான் பணியில் இருந்து

ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, 2 ஆண்டுகள் ஆகிவிட்டது. நானும் பிரதிவாதியும் ஒரே பிர்காவில் ஒன்றாக வேலை பார்த்துள்ளோம். பிரதிவாதியுடைய பழக்கவழக்கங்கள் எல்லாம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியும் அவர் எனது உறவினர் தான். எனக்கும் அவருக்கும் சுமார் 10ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து கொடுக்கல் வாங்கல் இருந்து வருகிறது என்றால் 2015ம் ஆண்டு முதல் கொடுக்கல் வாங்கல் இருந்து வருகிறது. அவ்வப்போது என்னிடம் பிரதிவாதி கடன் பெற்று திருப்பி செலுத்திவிடுவது வழக்கம் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு என்னிடம் 1 லட்சம் ரூபாய் கடனாக பெற்று அதை லோன் பெற்று அடைத்துவிட்டார் என்றால் சரியல்ல, 2016ம் வருடம் தான் பிரதிவாதி கடனை பைசல் செய்தார். அவ்வாறு 1 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும் போது ஒரு கடனுறுதி சீட்டை ஆதரவாக பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவ்வாறு 3 -1/2 லட்சம் ரூபாய் கடன் பெற்று திரும்ப செலுத்தியும் விட்டார். என்னிடம் 1 லட்சம் ரூபாய் சின்னையா கடன் பெற்று மீண்டும் திரும்ப செலுத்தும் போது அவருக்கு ஆதரவாக பெற்ற கடனுறுதி சிட்டை திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துவிட்டேன். 25.01.2022ம் ஆண்டு 1-1/2லட்சம் ரூபாய் பிரதிவாதி என்னிடம் கடனாக பெற்றார். பிரதிவாதி தனக்கு கடன் வேண்டும் என்று என்னை அணுகினார். என் வீட்டில் வைத்து 1-1/2லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன். எனது பூர்விகம் கீழகள்ளந்திரி என்றால் அங்கு எனக்கு ஒரு மோட்டார் ரூம் இருக்கிறது. அதில் இருந்து நான் விவசாயவேலை செய்து வருகிறேன். 1-1/2லட்சம் ரூபாய் கடன் பிரதிவாதி பெறும் போது, மதுரைசாமி S/o வீரணன், அய்யாவு அப்பா பெயர் தெரியவில்லை, தொப்புலாம் பட்டி(கள்ளந்திரி)யை சார்ந்தவர், ஆகியோர் அப்போது இருந்தோம். பணம் பெற்ற அன்றே வழக்கு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால்

ஆமாம். மதுரை சாமி தான் புரோநோட்டை எழுதினார். சாட்சியிடம் வழக்கு கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஆவணம் காட்டப்பட்டு அதில் உள்ள விபரங்கள் கருப்பு மையினாலும், கையொப்பம் போடப்பட்ட பகுதி நீல மையினாலும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வழக்கு கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்தது மதுரை சாமி என்றும் அதை சாட்சியாக கையெழுத்திட்டது அய்யாவு என்பதை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, வழக்கு அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொல்லியிருக்கிறேன். பிரதிவாதி பணத்தை திருப்பி செலுத்தாதற்கு கள்ளந்திரியை சேர்ந்தவரிடம் பஞ்சாயத்து வைத்தேனா என்றால் இல்லை, நேரடியாக சென்று கேட்டேன். கள்ளந்திரியை சேர்ந்த மூர்த்தி, புகழேந்தி S/o சேது, வைத்தீஸ்வரன் S/o மச்சக்காளை ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய விவசாய செய்யும் இடத்திற்கு அருகாமையில் தான் அவர்கள் நிலம் இருக்கிறது. மேற்படி நபர்கள் முன்னிலையில் ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டு பிரதிவாதி வாங்கிய கடனை திருப்பி கொடுத்ததாக பஞ்சாயத்தில் சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. அவ்வாறு பஞ்சாயத்தில் கடனுறுதி சீட்டை ஒப்படைப்பதாக கூறிவிட்டு தற்போது அதை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 25.01.2022 தேதியில் பிரதிவாதி என்னிடம் எவ்வித கடனும் பெறவில்லை என்றும் நான் 2012ம் ஆண்டு பிரதிவாதி கொடுத்த கடனுக்கு ஆதரவாக கொடுத்த பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டை பின்னிட்டு பூர்த்தி செய்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனிற்கு ஆதரவாக நான் அவருடைய ATM கார்டு, வங்கிகணக்கு புத்தகத்தையும் பிணையமாக வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு நான் பிரதிவாதிக்கு எந்த

கடனும் கொடுக்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக எந்த கடனுறுதி சீட்டும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.24 20:08:10 +0530

Sub Judge

Melur